# பறந்து போகும் பயம்

## ஹலோ குட்டீஸ் நல்லாயிருக்கீங்களா!

அருமையான அப்பா, அம்மாவுக்கு அருண்-ன்னு ஒரு குட்டி சுட்டி பையன் இருந்தான். அவனுக்கு எப்பவெல்லாம் லீவு கிடைக்குதோ அப்போ எல்லாம் அவங்க அப்பா, அம்மா அவனை பாட்டி வீட்டுக்கு ட்ரெயின்ல கூட்டிட்டு போவாங்க. அருண் இப்ப 7-வது படிக்கும் கொஞ்சம் பெரிய பையனா வளர்ந்து விட்டான். ஒருநாள் அப்பா அம்மா கிட்ட வந்து இந்த லீவுல நான் தனியா பாட்டி வீட்டுக்கு ட்ரெயின்ல போறேன்னு சொன்னான். நான் தான் இப்ப பெரிய பையன் ஆயிட்டேன்-ல என்றான். அப்பாவும், அம்மாவும் ரொம்ப நேரம் யோசிச்சு, சரி, நீ போ ஆனா நாங்க தான் உன்னை ட்ரெயின்ல ஏத்தி விடுவோம். இதில் எந்த மாற்றமும் இல்லை என்றவுடன். அருணும் ரொம்ப சந்தோஷமா ஐயா, நம்ம நெனச்சபடியே ட்ரெயின்ல தனியா போக போறோம். ஸ்நாக்ஸ் எல்லாம் வாங்கி சாப்பிடலாம் என்று நினைத்து சிரிப்பா என்றான். மறுநாள் மதியம் ரெண்டு மணிக்கு ட்ரெயின். 12 மணிக்கு அருண் புறப்பட்டு விட்டான். அப்பா, அம்மா, அருண் மூன்று பேரும் ஆட்டோ பிடித்து ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்தார்கள். அம்மாவையும், அருணையும் பிளாட் பார்ம்ள நிற்க வைத்து விட்டு அப்பா டிக்கெட் கவுண்டருக்கு சென்று டிக்கெட் எடுத்து வந்தார். அதற்கு அப்புறம் டிக்கெட்டை அவனுடைய பேக்ல சைடு ஜிப்ல பத்திரமாக வைத்துக்கொள் என்று அப்பாவே பேக்ல வைத்து விட்டார். அதனுடன் ஒரு கவரையும் சேர்த்து அப்பா வைத்தார் அது என்னங்கப்பா கவர் என்று கேட்டான் அருண். உனக்கு எப்பவாவது பயமா இருந்தா இந்த கவரை பிரித்துப்படி என்றார். அவனும் ட்ரெயினில் உட்கார்ந்து இருக்கிற சந்தோஷத்துல சிரிப்பா சிரிப்பா என்றான். ட்ரெயின் கிளம்பும் போது டாட்டா காட்டிட்டு அம்மாவும், அப்பாவும் புறப்பட்டார்கள். அருணுக்கு ரொம்ப சந்தோஷம் மட்டுமல்ல ரொம்ப பெருமையாவும் இருந்துச்சு. நானே தனியா ட்ரெயின்ல போறேன். வேடிக்கை பார்த்துக்கொண்டு, ஸ்நாக்ஸ் சாப்பிட்டுக் கொண்டே இருந்தான். ட்ரெயின் டிக்கெட் பரிசோதிக்கிறவர் வந்தார். எல்லாரும் டிக்கெட்டை காண் பித்தார்கள். அருணிடம் வந்தபோது அவனும் டிக்கெட்டை காண்பித்தான். என்ன தம்பி நீ மட்டும் தான் வந்திருக்கிறாயா? உங்க அம்மா, அப்பா வரலையா? நீ தனியா வந்திருக்கிறாயா? என்று கேட்டவுடன், அவனுக்கு நெஞ்சு படபடன்னு அடிக்க ஆரம்பிச்சிருச்சு. ஆமாம் சார்னு அவன் சொல்லி கொண்டிருக்கும் போதே, அங்கே உட்கார்ந்து இருக்கிறவங்க எல்லாரும் இந்தப் பையன் தனியாக வந்திருக்கானா என்ன தைரியம் தனியா வந்திருக்கான் என்று பேசுறது அவன் காதுல விழுந்தவுடன் அவனுக்கு ரொம்ப பயமாயிருச்சு. உடனே அவனுக்கு அவங்க அப்பா சொன்னது ஞாபகத்துக்கு வந்துச்சு. வேகமா அப்பா வச்ச கவர் எடுத்து பிரிந்து படித்தான். பயந்து போன அவன் முகம் உடனே சந்தோஷமானது. அவன் என்ன படிச்சன்னு தெரிஞ்சுக்க உங்களுக்கு ஆசையா? இதை நீங்களும் படிக்கிறீங்களா? அருண் நீ உட்கார்ந்திருக்கிற பெட்டிக்கு அடுத்த பெட்டியில தான் அம்மாவும், நானும் உட்கார்ந்திருக்கிறோம் பயப்படாதே. ஓகே வா என்று எழுதி இருந்துச்சு. கொஞ்சம் தூரத்துல இறங்க வேண்டிய இடமும் வந்துருச்சு. அருண் இறங்கின உடனே அப்பா, அம்மாவை பார்த்து, நான் ரொம்ப பயந்துட்டேன். நீங்க எழுதினதை பார்த்த உடனே தான் பயம் எல்லாம் பறந்து போயிருச்சு என்று சொன்னான். குட்டீஸ் இயேசப்பாவுடைய வார்த்தைகளைப் படிங்க. உங்க பயமும் பறந்து போய்விடும்.

### ஜெபம்

அன்புள்ள இயேசப்பா எதற்கெடுத்தாலும் எனக்கு பயமா இருக்குது. எல்லா பயத்திலிருந்தும் என்னை காப்பாத்துங்க. உங்க வசனத்தைப் படிக்க எனக்கு உதவி செய்யுங்க. நீங்க என்னோடு கூட இருப்பதற்காக நன்றி. இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.



### மனப்பாட வசனம்

நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன். ஏசாயா 41:10